அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 25 / 2018
தேதி : 15.02.2018

**மின்வாரிய ஊழியர் போராட்டம் : பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கண்டு மக்களுக்கு பாதிப்பு நிகழாமல் தடுக்கவேண்டும்.**

**தமிழக அரசுக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வலியுறுத்தல்.**

கடந்த மாதம் நடந்த போக்குவரத்துத் தொழிலாளர்களின் போராட்டத்தால் பொதுமக்கள் பெரும் அவதிக்கு ஆளான நிலையிலிருந்து மீண்டிருக்கும் நிலையில், நாளை (16.02.2018) மின்வாரிய ஊழியர்களின் போராட்டம் நடைபெறப்போவதாக அறிவித்திருப்பது, கவலை அளிப்பதாக உள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடந்த போராட்டத்தை அடுத்து, போக்குவரத்துக் கட்டணங்களைப் பன்மடங்கு அதிகரித்து அரசு அதிர்ச்சி அளித்தது.

மின்வாரிய ஊழியர்களின் போராட்டமும் ஊதிய உயர்வு குறித்தே நடத்தப்படுவதால், இப்போராட்டத்திற்குப் பிறகு மின்கட்டணத்தையும் அரசு உயர்த்திவிடுமோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

போக்குவரத்துக் கழகங்களைப் போன்றே மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமும் நஷ்டத்திலும், கடன் சுமையிலும் இயங்கி வருவதே மக்களின் அச்சத்திற்கான கூடுதல் காரணம்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



மின் வாரிய ஊழியர்கள் போராட்டம், மின் விநியோகத் தடங்கல் உள்ளிட்ட பல்வேறு அவதிகளை ஏற்படுத்தும். பொதுத் தேர்வுக் காலம் நெருங்கிக் கொண்டிருப்பதால் மாணவர்களுக்கும், மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

எனவே, தமிழக அரசு உடனடியாக மின்வாரிய தொழிற்சங்கத்தினருடன் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு கண்டு, போராட்டம் நிகழாத நிலையை உருவாக்கவேண்டும். மின்வாரிய ஊழியர்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும். மக்களுக்கு எந்தவித பாதிப்பும் நிகழாமல் தடுக்கவேண்டும் என்பதையும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் வலியுறுத்த விரும்புகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com